**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**12-11-2019 அமர்வு வழக்கு எண். 40/2013 மனுவின் பேரில் அ.சா. 2 திருமதி. தனலட்சுமி , அவர்கள் நீதிமன்ற அனுமதியின் பேரில் இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை .**

நான் 13.6.2012ம் தேதி அன்று என்னுடைய தம்பி மனைவி இறந்ததற்கு சென்றிருந்தேன். நான் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் சி.சி. நெம்பர் 405/2012 என்ற வழக்கில் சாட்சியம் கூறியுள்ளேன். சாட்சி சொல்லி நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதில் நான் கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரி. **அந்த ஆவணம் எதிரி தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒப்பம்/- தனலட்சுமி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 of 2013**
**Deposition of Witness for : PW. 12**

| | |
|---|---|
| Name | : திரு. கோவிந்தராஜ் |
| Father's Name | : அய்யாவு |
| Village | : மன்னார்பாளையம்(பெரியகல்லபாடி) |
| Taluk | : திருவண்ணாமலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | :விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | :36 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12-11-2019.

முதல் விசாரணை.

நான் தற்போது மன்னார்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் D.D.H. வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர் தான். ஒரு 7 வருடத்திற்கு முன்பாக நான் தச்சம்பட்டில் இருந்த போது எனக்கு ஒரு அண்ணன் போன் செய்தார். வீராசாமி வந்து வெங்கடேசனை அடித்து விட்டார் என்று சொன்னார். வெங்கடேசனை அடித்ததாக சொன்னார்கள். அதனால் அவர் இறந்து விட்டார் என்று சொன்னார். நான் வெங்கடேசனின் இறப்பிற்கு சென்றேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது.

ஒப்பம்/- கோவிந்தராஜ்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 40 of 2013

## Deposition of Witness for : PW13

| | |
|---|---|
| Name | : திரு. ஜெயராமன் |
| Father's Name | : லட்சுமண பிள்ளை |
| Village | : 26. நடுத்தெரு வளையாம்பள்ளம் |
| Taluk | : திருவண்ணாமலை |
| Caste | : கருணீகர் |
| Calling | :V.A.O. (Retd.) |
| Religion | : Hindu |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12-11-2019.

முதல் விசாரணை.

நான் தற்போது வளையாம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் 14.6.2012ம் தேதி நான் பெரியகல்லப்பாடி குரூப் நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். காலையில ஒரு 10.00, 10.30 மணிக்கு நான் பணியில் இருந்த போது 1.வீரன் என்கிற வீராசாமி , 2. ராஜாமணி, 3. வளர்மதி இவர்கள் அனைவரும் எங்கள் முன்னாடி ஆஜர் ஆனார்கள். ஆஜர் ஆவதற்கு முதல் நாள் எதிரிகளுக்கும் , இறந்து போனவருக்கும் குடும்ப தகராறு காரணமாக அடித்து விட்டார்கள் என்றும் , அவர் இறந்து விட்டார் என்றும், நாங்கள் மறைந்து கொண்டோம் என்று சொன்னார்கள். எதிரிகள் அதற்கு அடுத்த நாள் ஆஜர் ஆனார்கள். அவர்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** நான் காவல் ஆய்வாளரை காலையில் தான் பார்த்தேன். காவல் ஆய்வாளர் என்னிடம் எந்தவித வாக்குமூலமும் பெறவில்லை. ஆஜர் எதிரிகள் என்னிடம் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் , காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரிகளுடன் யாரும் வரவில்லை. நான் காவல் துறை சொன்னதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/- ஜெயராமன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 40 of 2013

## Deposition of Witness for : PW.14

| | |
|---|---|
| Name | : டாக்டர் திரு. கார்த்திகேயன். |
| Father's Name | : S. Kandasamy |
| Village | : Tiruvannamalai |
| Taluk | : Tiruvannamalai |
| Caste | : S.C. |
| Calling | : Doctor |
| Religion | : Hindu |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12-11-2019.

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். நான் 13.6.2012ம் தேதி மதியம் 2.35 மணி அளவில் அவரது சகோதரர் ரமேஷ் என்பவர் அழைத்து வந்தார். அவர் வெங்கடேசன் என்பவரை மூன்று தெரிந்த நபர்கள் செங்கல்லினாலும், கைகளினாலும் தாக்கினார் என்று சொன்னார். அவரை பரிசோதித்த போது இடது பக்க கழுத்தில் நகக்கீரல்கள் இருந்தது. வாயில் நுரை தள்ளி இருந்தது. அவர் சம்பவ இடத்திலயே இறந்து விட்டார் என்று கூறி விபத்து பதிவேட்டு நகலில் பதிவு செய்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். **அவ்வாறு பதிவு செய்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.த.சா.ஆ. 8 ஆகும். ம**று நாள் 14.06,2014ம் தேதி மதியம் 3.05 மணி அளவில் அன்று பணியில் இருந்த போது 33 வயது மதிக்கத்தக்க வெங்கடேசன் என்பவ சவத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு தச்சம்பட்டு காவல் ஆய்வாளரிடம் இருந்து கடிதம் பெற்றேன். அன்றே சுமார் மதியம் 3.05 மணி அளவில் பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. அங்க அடையாளங்கள். கருப்பு மச்சம் வலது தொடையில் காணப்பட்டது. கருப்பு மச்சம் இடது கையில் காணப்பட்டது. உடல் விறைத்துக் காணப்பட்டது.

**<u>வெளிப்புற பரிசோதனை.</u>**

**<u>காயம் 1</u>**. இடது பக்க கழுத்தில் 4 சிராயப்புக் காயங்கள் காணப்பட்டது. அந்த சிராயப்புக் காயங்கள் நகக்கீரல்களால் ஏற்பட்டிருக்கக்கூடும்.

**<u>காயம் 2.</u>** 0.5 x 0.5 அளவிலான சிராயப்புக் காயம் முன் கழுத்துக் குழியில் காணப்பட்டது. அந்த சிராயப்புக் காயங்கள் நகக்கீரல்களால் ஏற்பட்டிருக்கக்கூடும்.

**<u>காயம். 3</u>**. இடது மார்பு பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது காலில் சிராய்ப்புக் காயம் காணப்பட்டது.

**<u>உள்புற பரிசோதனை</u>**

மூளை சிவந்து காணப்பட்டது. கழுத்து பகுதி கழுத்தில் உள்ள நாவடி எலும்பு உடைந்து காணப்பட்டது. மார்புப் பகுதி. இரண்டு நுரையீரல்களும் சிவந்து காணப்பட்டது. இதயத்தில் 100 எம்.எல். அளவிலான ரத்தம் இருந்தது. வயிற்றுப்பகுதி 300 எம்.எல். அளவிலான செரித்த உணவு காணப்பட்டது. குடல் , கல்லீரல், கணயம், இரண்டு சிறுநீரகங்களும் அனைத்தும் சிவந்து காணப்பட்டது. சுமார் 5.10 மணி அளவில் பிரேத பரிசோதனை முடிவடைந்தது.

கீழ்கண்ட ஏழு பொருட்களை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது.

<u>அவை.</u> . வயிறு, குடல், கல்லீரல், சிறுநீரகங்கள், ரத்தம், நாவடி எலும்பு , ஆகியன ஆய்வுகளுக்கு அனுப்பப்பட்டது.

**<u>ஆய்வின் அறிக்கை முடிவில்.</u>** கீழ்கண்ட 6 பொருட்களும் எந்த விஷத்தன்மையும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டது.

நாவடி எலும்பின் பரிசோதனை வேலூர் மருத்துவக்கல்லூரியில் இருந்து பெறப்பட்டது. அதில் இடது பக்க நாவடி எலும்பு உடைந்திருந்தது என்று சான்று வழங்கப்பட்டது.

மேற்கூறிய ஆவணங்களின் அடிப்படையில் இறப்பு கழுத்தில் ஏற்பட்ட நெருக்கத்தினால் மூச்சுத்திணறி இறந்திருக்கக்கூடும் என்று சான்று அளித்தேன். **நான் அவ்வாறு கொடுத்த பிரேத பரிசோதனைஅறிக்கை அ.த.சா.ஆ. 9 ஆகும். தடய**

**அறிவியல் ஆய்வகத்தில் இருந்து வரப்பெற்ற அறிக்கை அ.த.சா-ஆ. 10 ஆகும். நாவடி எலும்பு தொடர்பான அறிக்கை அ.த.சா.ஆ. 11 ஆகும்.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.** வெங்கடசன் என்பவரின் பிரேதத்தை முழுவதுமாக பரிசோதணை செய்தேன். பரிசோதணை செய்து விட்டு அ.த.சா.ஆ. 8ல் வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்று எழுதி உள்ளேன் என்றால் சரி. நகக்கீரல் உள்ளதா என்று சந்தேகம் இருந்ததால் கேள்விக்குறி போட்டிருந்தேன் என்றால் சரி. கழுத்துப்பகுதியில் விரல் பதிவு எதுவும் இல்லை. கழுத்து பகுதி எதுவும் வீங்கி இருக்கவில்லை. கழுத்துப் பகுதியில் ஏதேனும் வித்தியாசனமான மாறுதல்கள் எதுவும் காணப்படவில்லை. முகமானது நீல நிறமாகவோ, அல்லது கருப்பு நிறமாகவோ காணப்படவில்லை என்றால் சரி. முகம் வீங்கி இருக்கவில்லை. சாதாரணமாக தான் இருந்தது. முதல் காயம் நகக்கீரல்கள் இருக்கலாம் என்று தான் கூறியிருக்கிறேன் என்றால் சரி. கழுத்தில் காணப்பட்ட கீரல் வேறு பொருளால் கூட ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி. சிராய்ப்பு காயங்கள் நீளம், அகலம் ஆகியன குறிப்பிட்டு சொல்லவில்லை. அங்கு பல மாதிரியாக காணப்பட்டது. கழுத்தில் உள்ள சிராய்ப்பு காயங்கள் கீரலான முறையில் ஒரு மாதிரியாக இருந்ததால் அதனை மல்டிபுல் என்று கூறியுள்ளேன். சிராயப்பு காயத்தின் வடிவம் குறித்து நான் பார்க்கவில்லை. 1-வது காயத்தில் ரத்தம் வழிந்ததற்கான வாய்ப்பில்லை என்றால் சரி. 2-வது காயம் நகக்கீரலாக இருக்க வாய்ப்புள்ளது என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. நகக்கீரல் இல்லாமல் வேறு பொருளால் கூட ஏற்பட்ட காயங்களாக கூட இருக்க வாய்ப்புண்டு என்றால் சரி. 3-வது, 4-வது காயம் கூட சிராய்ப்பு காயங்கள் என்றால் சரி. தலை மற்றும் கழுத்து என்று குறிப்பிட்டு ஸ்கல்ப் , ஸ்கல், மெனிங்க்ஸ் இண்டாக்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. ( அதற்கு மருத்துவர் மண்டை, மண்டை ஓடு மற்றும் மூளையின் மேல் உறைகள் சாதாரண நிலையில் இருந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்று